26.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### "அனைத்துப் பாசனங்களுக்கும் ஒரே தேதியில் தண்ணீர் திறக்க வேண்டும்'

பவானிசாகர் அணையிலிருந்து அனைத்துப் பாசனங்களுக்கும் ஒரே தேதியில் தண்ணீர் திறக்க வேண்டும் என கீழ்பவானி பாசன விவசாயிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சங்கத்தின் செயலாளர் செ.நல்லசாமி கூறியதாவது:

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனம், கொடிவேரி பாசனம், காளிங்கராயன் பாசனம் உள்ளிட்ட பாசனங்களுக்கு ஒரே தேதியில் தண்ணீர் திறக்கப்படவேண்டும். குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு சிறிய பாசனங்களுக்கு தண்ணீர் திறப்பதால், பெரிய பாசனங்கள் பாதிக்கப்படுகின்றன.

இதனால், கடந்த 58 ஆண்டுகளில் கீழ்பவானி பாசனத்தில் 15 போகம் கடலை சாகுபடியும், 8 போகம் நெல் சாகுபடியும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறை, காவிரி இறுதி தீர்ப்பின்படியும், அரசு ஆணைகளின் படியும் நீர் நிர்வாகம் செய்ய வேண்டும். முன்கூட்டியே எந்தப் பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கக்கூடாது.

தேவையான நீர்வரத்து கிடைத்த பின்னர் 3 பாசனங்களுக்கும் ஒரே தேதியில் தண்ணீர் திறக்க வேண்டும். பொதுப் பணித் துறை தனது சொந்த விருப்பு,வெறுப்பு மற்றும் ஆதாய அடிப்படையில் தண்ணீர் திறப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றார்.

## தேவாலாவில் 89 மி.மீ. மழைப் பதிவு

நீலகிரி மாவட்டத்தில் அதிகபட்சமாக தேவாலாவில் 89 மி.மீ. மழைப் பதிவாகியுள்ளது.

உதகை உள்ளிட்ட பகுதிகளில் கடும் குளிரான காலநிலை நிலவி வந்தது. இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் இருந்து மாவட்டத்தின் ஒருசில பகுதிகளில் திடீரென பலத்த மழை பெய்தது. இதில், அதிக அளவாக தேவாலாவில் 89 மில்லி மீட்டர் மழை பெய்தது. கூடலூரில் 36 மி.மீ., குன்னூரில் 15 மி.மீ., பர்லியாரில் 14 மி.மீ., நடுவட்டத்தில் 8 மி.மீ., எமரால்டு, அவலாஞ்சியில் தலா 4 மி.மீ., அப்பர்பவானி, கிளன்மார்கனில் தலா 3 மில்லி மீட்டரும் மழைப் பதிவாகியுள்ளது. உதகையில் திங்கள்கிழமை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுடன், கடும் குளிரும் நிலவியது.

## 10 இடங்களில் வேளாண் விரிவாக்க மையம் கட்டும் பணி தீவிரம்

திருவாரூர் மாவட்டத்தில் 10 இடங்களில் வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

விவசாயிகள் வேளாண்துறை அலுவலர்களை அணுகி ஆலோசனைப் பெற, விதை வாங்க, விதைச்சான்று பெற, அனைத்து வேளாண் சார்ந்த அலுவலங்களையும் ஒரே இடத்தில் கொண்டுவர வட்டத்துக்கு ஒரு இடத்தில் ரூ. 1.5 கோடி மதிப்பில் வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் என்ன பயிர், எந்த ரகத்தில் செய்யலாம், விதைகளை எங்கு பெறுவது, நிலத்தின் மண் பரிசோதனை செய்வது, வேளாண் இயந்திரங்களை எங்கு, எப்படி பெறுவது என வேளாண்மைத் துறையில் உள்ள பலன்களைப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் மாவட்ட வேளாண்மை அலுவலகத்துக்கு சென்று ஆலோசனைப் பெற்று விவசாயம் செய்து வருகின்றனர். இதனால் கால விரயமும், அலைச்சலும் விவசாயிகளுக்கு ஏற்பட்டு வந்தது.

இதைப்போக்க, ஒவ்வொரு வட்டத்திலும் ரூ. 1.5 கோடி மதிப்பில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டது. அதன்படி, திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், நன்னிலம், குடவாசல், வலங்கைமான், நீடாமங்கலம்,

கொரடாச்சேரி, மன்னார்குடி, கோட்டூர், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஆகிய 10 இடங்களிலும் மொத்தம் ரூ.15 கோடி மதிப்பில் இந்த மையங்கள் நபார்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு, பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இம்மையத்தில் வேளாண் விற்பனை மையம், பட்டு வளர்ச்சித் துறை, தோட்டக்கலைத் துறை, மண் பரிசோதனை நிலையம், வேளாண் பொறியியல் துறை, வேளாண்மைத் துறை, விதைச்சான்று அலுவலகம், வேளாண்மை விற்பனையகம் ஆகிய அனைத்தும் ஒரே கூரை யின் கீழ் செயல்பட உள்ளது. மேலும், விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான அரங்கமும் அமைக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து, திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் க.மயில்வாகணன் கூறியது: விவசாயிகள் வேளாண்துறை சார்ந்த ஆலோசனைகளை அலைச்சலின்றி பெற இந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திருவாரூர் மாவட்டத்தில் 10 இடங்களில் ரூ.15 கோடியில் ஒவ்வொரு இடத்திலும் தலா 33 சென்ட் நிலத்தில் அமைக்கப்படும். இந்த பணிகள் முழுவீச்சில் நடைபெறுகிறது. இதனால், விவசாயிகள் எளிதில் அதிகாரிகளை அணுகி, ஆலோசனைப் பெறுவதுடன் விவசாயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி மகசூலை அதிகரித்து வருவாய் பெற முடியும் என்றார்.

## குமரி மாவட்டத்தில் நிகழ் பருவத்தில் 17 டன் விதைகள் கொள்முதல்: ரப்பர் வாரியம் முடிவு

நிகழ் பருவத்தில் குமரி மாவட்டத்திலிருந்து 17 டன் விதைகளை கொள்முதல் செய்ய ரப்பர் வாரியம் திட்டமிட்டுள்ளது.

இந்தியாவில் 6 லட்சம் ஹெக்டேர் பரப்பில் ரப்பர் சாகுபடி நடைபெறுகிறது. மொத்த பரப்பில் கேரளத்தில் 82 சதமும், வடகிழக்கு மாநிலங்களில் 10 சதமும், கர்நாடகத்தில் 4 சதமும், தமிழகத்தில் 3 சதமும், இதர பகுதிகளில் 1 சதமும் ரப்பர் சாகுபடியாகிறது.

இந்தியாவில் பிற மாநிலங்களில் மறுநடவு மற்றும் புதுநடவு செய்யப்படும் ரப்பருக்குத் தேவையான செடிகள் தயார் செய்வதற்கு தேவையான விதைகள் குமரி மாவட்டத்திலிருந்து மட்டுமே தேர்வு செய்யப்படுகின்றன. இம் மாவட்டத்திலிருந்து

தேர்வு செய்யப்படும் விதைகள் நோய்த் தாக்குதலின்றி தரமானதாக இருப்பதே இதற்குக் காரணமாகும். இதனால் ரப்பர் மரங்களின் காய்களிலிருந்து விதைகள் வெடித்து விழும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கேரளத்தில் நாற்றுப் பண்ணை வைத்திருப்பவர்கள் மற்றும் ரப்பர் வாரியத்தினர் குமரி மாவட்டத்தில் முகாமிட்டு விதைகளைத் தேர்வு செய்து கொண்டு செல்கின்றனர்.

ஏழைகளுக்கு வருவாய்: ரப்பர் மரங்களிலிருந்து வெடித்து விழும் விதைகளைச் சேகரித்து விற்பனை செய்வதன் மூலம் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள், விவசாயிகள் குறிப்பாக ஏழைகளுக்கு குறிப்பிட்ட அளவு வருவாய் கிடைக்கிறது.

தற்போது ஒரு கிலோ ரப்பர் விதை சில்லறை விலையில் ரூ.7 முதல் ரூ.10 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் விதைகளுடன் வெடித்து விழும் தோடுகளை, சமையலறைகளில் எரிபொருளாகவும் பயன்படுத்துகின்றனர்.

17 டன் விதைகள்: நிகழ் பருவத்தில் குமரி மாவட்டத்திலிருந்து சுமார் 3 லட்சம் ரப்பர் விதைகளை குறிப்பாக 17 டன் விதைகளை கொள்முதல் செய்ய ரப்பர் வாரியம் திட்டமிட்டு அதற்கான பணிகளைத் தொடங்கியுள்ளது.

இது குறித்து வாரியத்தின் துணை ரப்பர் உற்பத்தி ஆணையர் (நடவுப் பொருள்கள்) கிளாரம்மா, மார்த்தாண்டம் அலுவலக உற்பத்தி ஆணையர் ஸ்ரீதத்தன் ஆகியோர் கூறியதாவது: கேரளத்தில் கரிக்காட்டூர், அடைக்காமண், மஞ்சேரி, காஞ்சிரகுளம், உழிக்கல், ஆலக்கோடு ஆகிய 6 இடங்களில் ரப்பர் வாரியத்திற்கு நாற்றுப் பண்ணைகள் உள்ளன. அங்கு நல்ல தரமான ரப்பர் செடிகள் உருவாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தியாவில் குமரி மாவட்டத்தில் மட்டும்தான் ரப்பர் மரங்களில் விதைகள் வெடித்து விழுவதற்கு உகந்த காலநிலை நிலவுகிறது. இதன் காரணமாக ரப்பர் வாரிய நாற்றுப் பண்ணைகளுக்கு குமரி மாவட்டத்திலிருந்து விதைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. நிகழ் பருவத்தில் 17 டன் ரப்பர் விதைகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன என்றனர்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## வேப்பமுத்து சீசன்

சில வகைப் பழங்களில் உள் இருக்கும் வித்தினை விதை என்கிறோம். உதாரணம்; கொய்யா விதை, திராட்சை விதை, சில வகைப் பழங்களில் கொட்டை என சொல்கிறோம்.

எ.கா., மாங்கொட்டை, பலாக்கொட்டை. ஆனால் வேப்பம் பழக்கினுள் உள் இருக்கும் வித்தினை அதன் சிறப்பினை உணர்ந்து 'வேப்பமுத்து' என்கிறோம்.
வேப்பமுத்து சீசன் ஆடியில் தொடங்கி ஐப்பசி வரை நீடிக்கும். இயற்கை விவசாயம் பரவலாகி வருவதால் வேப்பமுத்துவின் தேவை அதிகமாகிறது. விலையும் அதிகரிக்கிறது.

வேப்பமுத்துவில் இருந்து அசாடிரிக்டின் என்ற உயர்வேதிப் பொருள் எடுக்கப்படுகிறது. 50 கிலோ வேப்பமுத்துவில் இருந்து 8 கிலோ வேப்பெண்ணெய் எடுக்கலாம்.

## பவானி சுற்று வட்டார பகுதிகளில் நிலக்கடலை அறுவடை தீவிரம்

பவானி: பவானி சுற்று வட்டார கிராமங்களில், நிலக்கடலை அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து ஜம்பை அருகேயுள்ள சின்னியம்பாளையம், வெள்ளை பிள்ளையார் கோவில் தோட்டத்தைச் சேர்ந்த விவசாயி தங்கராஜ் கூறியதாவது: நிலக்கடலை சாகுபடி கடந்த மார்ச் மாத இறுதியில் துவங்கியது. தற்போது, 120 நாள் முடிந்த நிலையில், முற்றிய நிலக்கடலை அறுவடை செய்யப்படுகின்றன. இப்பகுதியில், கோ-2, பட்டாணி, குஜராத், விருத்தாசலம்-2 முதலிய ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. பட்டாணி ரகம் மேட்டுப்பாங்கான நிலத்திற்கும், கோ-2, பாசன நிலத்திற்கும் ஏற்றவகைகளாக உள்ளன. நல்ல விளைச்சல் என்றால் ஒரு

ஏக்கருக்கு 30 மூட்டை (45 கிலோ ) கிடைக்கும். அறுவடை செய்த நிலக்கடலையை பவானி, பூனாட்சி, மயிலம்பாடி, துருசாம்பாளையம் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் நேரடியாக வந்து வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் விவசாயத்தில் ஆர்வம் லாபம் வந்தால் மகிழ்ச்சி

பந்தலுார்: பந்தலுார் பகுதியில்,நெல் விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கேரளா மாநிலத்தில் பெய்த பருவ மழை, நீலகிரி மாவட்டம் பந்தலுார் பகுதிகளில் அதிகளவில் பெய்து வருகிறது. இதனால், விவசாயிகள் தோட்டங்களில், தேயிலை, காபி நாற்றுக்களை நடவு செய்து வருகின்றனர். மேலும், வயல் வெளிகளில் நெல் நாற்றுக்கள் நடுவதற்கான முதல்கட்ட பணி துவக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறுகையில், 'குறுவை நெல் சாகுபடியில் நாங்கள் ஆர்வம் காட்டி வரும் நிலையில், மழையின் அளவு இதே அளவில் காணப்பட்டால், நெல் விவசாயம் லாபத்தை தர வாய்ப்புள்ளது' என்றனர்.

## ஆகஸ்டில் தேங்காய் விலை உயருமா நத்தம் விவசாயிகள் எதிர்பார்ப்பு

நத்தம்: 'நத்தம் பகுதியில் ஆகஸ்டு மாதம் துவங்கியதும் விலை உயர்வு கிடைக்கும்' என, தென்னை விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

நத்தம்பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.

இங்கிருந்து மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களுக்கு தேங்காய் அனுப்பப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக தேங்காய் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஒரு தேங்காயின் விலை ரூ.3 முதல் ரூ.4 வரை விற்கிறது. வடமாநிலங்களில் தேவை குறைந்ததும், ஆந்திராவில் விளைச்சல் அதிகரித்ததுமே விலை வீழ்ச்சிக்கு முக்கிய கராணம் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

தற்போது நத்தம் பகுதியில் உள்ள குடோன்களில் தேங்காய் அதிக அளவில் தேக்கமடைந்துள்ளது.

வியாபாரிகள் தேங்காய் கொள்முதல் செய்வதை குறைத்துள்ளனர். விவசாயிகள் வேறு வழியின்றி கொப்பரைக்கு அனுப்ப, தாங்களே காய்களை உடைத்து காயவைத்து பதப்படுத்தி வருகின்றனர்.

வரும் ஆகஸ்டு மாதத்திலிருந்து வடமாநிலங்களில் விழாக்கள், பண்டிகைகள் தொடர்ந்து வரும் என்பதால் தேவை அதிகரிக்கும். இதனால் தேங்காய் விலை உயரும் என வியாபாரிகளும், விவசாயிகளும் தெரிவிக்கின்றனர்.

**மரவள்ளிக்கிழங்கு விலை உயரும்: மாவட்ட விவசாயிகள் நம்பிக்கை**

வேலாயுதம்பாளையம்: 'கரூர் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட பகுதிகளில் மரவள்ளிக்கிழக்கு விலை குறைவாக இந்த வாரம் விற்றாலும், அடுத்த வாரம் அதிக விலைக்கு விற்கும்' என்று, விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, வேலாயுதம்பாளையத்தைச் சேர்ந்த விவசாயிகள் கணேசன், பெருமாள்சாமி ஆகியோர் கூறியதாவது: கரூர் மாவட்டம், புன்னம், நல்லிக்கோவில், குளத்துப்பாளையம், ஓலப்பாளையம், ஒரம்புப்பாளையம், வேட்டமங்கலம், கவுண்டன்புதூர் போன்ற பல்வேறு பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. புதுச்சத்திரம், ஆத்தூர், தொ.ஜேடர்பாளையம், புதுச்சத்திரம், கீரனூர், நாமகிரிப்பேட்டை போன்ற பகுதிகளில் செயல்படும் ஜவ்வரிசி ஆலைகளுக்கு தரகர்கள் மூலம், பாயின்ட் அடிப்படையில் டன் கணக்கில் விற்கப்பட்டு வருகிறது. கடந்த வாரம் மரவள்ளிக்கிழங்கு ஒரு டன், 9,500 ரூபாய் வரை விற்பனையானது. இந்த வாரம் ஒரு டன், 8,000 ரூபாய்க்கு விற்பனையானது. சிப்ஸ் தயாரிப்போர் கடந்த வாரம், 13 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிச் சென்ற நிலையில், தற்போது, 12 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்தனர். மரவள்ளிக்கிழங்கு இந்த வாரம் விலை குறைந்திருந்தாலும், வரும் வாரம் காவிரியில் தண்ணீர் வருவதன் மூலம், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து பாசனத்துக்கு பயன்படும். அதனால், மரவள்ளிக்கிழங்கு விலை உயர வாய்ப்பிருக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வெண்ணந்தூரில் நேற்றிரவு கனமழை

வெண்ணந்தூர்: வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை பகுதிகளில் நேற்றிரவு, ஒரு மணிநேரம் கனத்தமழை பெய்தது. வெண்ணந்தூர் பேரூராட்சி மற்றும் அலவாய்பட்டி, வெள்ளக்கோவில், சவுதாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று இரவு, 8 மணியில் இருந்து, ஒரு மணி நேரம் கனத்த மழைபெய்தது. அதேபோல், நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி, தண்ணீர்பந்தல்காடு, அரியாகவுண்டம்பட்டி, வெள்ளக்கல்பட்டி ஆகிய பகுதிகளில் நேற்றிரவு, 9 மணியில் இருந்து, ஒரு மணிநேரம் கனமழை பெய்தது. இதனால், சாலைகளில் மழைநீர் வெள்ளம்போல் ஓடியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஆடி மாதத்தில் காற்று துவங்கி விடும் என்பதால், பெரும்பாலும் மழை இருக்காது. ஆனால், இந்த ஆண்டு ஆடி மாதம் துவங்கியதில் இருந்து, தொடர் மழை பெய்து வருவதால், மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ரூ.75 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்: அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கியில், நேற்று நடந்த ஏலத்தில், 75 லட்சம் ரூபாய்க்கு பருத்தி வர்த்தகம் நடந்தது. ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்குட்பட்ட, அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இதில், மதியம்பட்டி, பொரசல்பட்டி உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளிலிருந்து, 60 கிலோ எடை கொண்ட, 3,598 சுரபி ரக பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டன. இதில், குறைந்தபட்சம், 5,454 ரூபாய், அதிகபட்சம் 6,405 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 75 லட்ச ரூபாய்க்கு பருத்தி வர்த்தகம் நடந்தது.

## கழுதை பால் விற்பனை அமோகம்

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் அடுத்த, சந்தைபேட்டை பகுதியில் திருச்சியை சேர்ந்த சிலர் தங்கி, பள்ளிபாளையம், ஈரோடு மற்றும் பல பகுதிகளில் கழுதை பால் விற்பனை செய்கின்றனர். இதுகுறித்து, கழுதை பால் வியாபாரி முத்து கூறியதாவது: கழுதை பால் இயற்கையாகவே மருத்துவ குணம் கொண்டது.

குழந்தைக்கு கொடுத்தால், காமாலை, சோகை, மந்த நிலை உள்பட பல நோய்கள் ஏற்படாது. பெரியவர்கள் சாப்பிட்டால், இருமல், ஆஸ்துமா, இருமல் போன்ற நோய்கள் குணமாகும். பொதுமக்கள் கண் முன்னால், பால் கறந்து கொடுப்போம். பொதுமக்களும் விரும்பி வாங்குகின்றனர். நாங்கள், 50 மில்லி, 150 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## குறைந்த நீரில் அதிக மகசூல் பெற மக்காச்சோளம் சாகுபடி செய்யலாம்

மேல்மலையனூர், : இந்தியாவில் நெல், கோதுமைக்கு அடுத்தப்படியாக மக்காச்சோளம் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. கோழி மற்றும் இதர கால்நடைகளுக்கு பயன்படுத்தும் தீவனங்களில் கிட்டத்தட்ட 60 சதவீதம் மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச் போன்ற பொருட்கள் தயாரிப்பதற்கு மூலப்பொருளாக பயன்படுகிறது. 1 ஏக்கர் நெல் பயிரிட தேவையான நீரைக்கொண்டு 4 ஏக்கர் மக்காச்சோளம் பயிரிடலாம். மக்காச்சோளத்தின் வயது 90 முதல் 100 நாட்கள் ஆகும்.

ஆடிப்பட்டத்திற்கு கோ 1, கோஎச்(எம்) 4, கோஎச் (எம்) 5 போன்ற ரகங்கள் ஏற்றது. ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதை போதுமானது. முதலில் நிலத்தை டிராக்டர் மூலம் சட்டி கலப்பை கொண்டு ஒருமுறை உழவுசெய்து, பின்பு கொக்கி கலப்பையில் இருமுறை உழவுசெய்து, பின்பு 5 டன் தொழுவுரமிட்டு, பின்பு கொக்கி கலப்பையால் இரு முறை உழவு செய்ய வேண்டும். 2 அடி இடைவெளியில் 6 மீட்டர் நீளம் கொண்டு பார் அமைக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட பார்களில் செடிக்குச் செடி 20 மீட்டர் இடைவெளியில் ஒரு குழிக்கு 2 விதைகளை 4 செ.மீ ஆழத்தில் ஊன்ற வேண்டும். 12-15வது நாளில் நன்கு வீரியமாக வளர்ந்த 1 செடியை மட்டும் விட்டுவிட்டு மற்றதை களைய வேண்டும். மண் பரிசோதனைக்கு ஏற்ற தழை, மணி, சாம்பல் சத்துக்களை

இடவேண்டும். விதைத்தவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். பின்பு 4வது நாளும் 12வது நாளும் நீர்பாய்ச்ச வேண்டும்.வளர்ச்சி பருவமான 25 மற்றும் 36வது நாளில் நீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் பருவமான 48 மற்றும் 60வது நாளில் நீர் பாய்ச்ச வேண்டும். முதிர்ச்சி பருவமான 72வது நாளில் மற்றும் 85வது நாளில் நீர்பாய்ச்ச வேண்டும். மக்காச்சோள கதிரில் உள்ள விதைகள் காய்ந்து கடினமாகி பின்வெளியே மூடியுள்ள சோகை மஞ்சள் நிறமாக மாறும்போது, கதிர்களை அறுவடை செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4000 கிலோ மகசூல் கிடைக்கும். எனவே விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிட்டு நல்ல லாபமடையலாம் என வேளாண்மை அதிகாரி பெரியசாமி தெரிவித்துள்ளார்.

## அக்கரைப்பட்டி வேளாண் கூட்டுறவு சங்கத்தில் 3598 மூட்டை பருத்தி ரூ.75 லட்சத்திற்கு ஏலம்

ராசிபுரம் : அக்கரைப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் 3598 மூட்டை பருத்தி ரூ.75 லட்சத்திற்கு ஏலம் போனது. ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு உட்பட்ட அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு சங்க வளாகத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இதில் அக்கரைப்பட்டி, மதியம்பட்டி, பொரசல்பட்டி ஆகிய பகுதிகளில் இருந்து 3598 மூட்டை பருத்தி ஏலத்திற்கு விவசாயிகள் கொண்டு வந்தனர்.

சுரபி ரகம் குவின்டால் குறைந்த பட்சம் .5,454க்கும், அதிக பட்சம் ரூ.6,405க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.75 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.சேலம், நாமக்கல், ராசிபுரம், தர்மபுரி, இடைப்பாடி மற்றும் உள்ளூரில் இருந்து வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

## பட்டுக்கூடு விலை உயர்வு

கோவை : கோவை பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தில் உள்ள பட்டுக்கூடு விற்பனை நிலையத்தில் தினசரி பட்டுக்கூடுகள் விற்பனை நடக்கிறது. இதில் நேற்று (25ம் தேதி) நடந்த விற்பனைக்கு சுமார் 1,500 கிலோ பட்டுக்கூடு விற்பனைக்கு வந்தது. கோவை, திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். இவற்றை வியாபாரிகள் மற்றும் பட்டு கூட்டுறவு சங்கத்தினர்

கொள்முதல் செய்தனர். விற்பனையில், நேற்று ஒரு கிலோ பட்டுக்கூடு குறைந்தபட்ச விலை கிலோ ரூ.220 ஆகவும், அதிகபட்ச விலை ரூ.372 ஆகவும், சராசரி விலை ரூ.320 ஆகவும் இருந்தது. நேற்று பட்டு நூல் விலை கிலோ ரூ.2,753 ஆக இருந்தது. பட்டுக்கூடு விலை கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில், குறைந்தபட்ச விலை ரூ.20ம், அதிகபட்ச விலை ரூ.20ம், சராசரி விலை ரூ.22ம் அதிகரித்துள்ளது. பட்டுநூல் விலை ரூ.12 அதிகரித்துள்ளது. இம்மாத துவக்கத்தில் பட்டுக்கூடு குறைந்தபட்ச விலை கிலோ ரூ.401வும், பட்டுநூல் விலை ரூ.3 ஆயிரமாகவும் இருந்த நிலையில் நேற்றைய விலை எதிர்பார்த்த அளவிற்கு உயரவில்லை என்பதால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர்.

**விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம்**

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரியில் வருகிற 28ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வருகிற 28ம் தேதி காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் கதிரவன் தலைமையில் நடைபெறுகிறது. எனவே, இந்த கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் பங்கேற்று, தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள் என்ற அதில் தெரிவித்துள்ளனர்.

**சேவூரில் ரூ.50 ஆயிரத்துக்கு நிலக்கடலை ஏலம்**

அனுப்பர்பாளையம் : அவிநாசி அருகே சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று ரூ.50 ஆயிரத்துக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. சீசன் இல்லாததால் வரத்து மிகவும் குறைந்தது. ஏலத்துக்கு 30 நிலக்கடலை மூட்டைகள் மட்டுமே கொண்டு வரப்பட்டன. குவிண்டாலுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 6,450 முதல் ரூ.6,350 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.5,150 முதல் ரூ. 5,450 வரையிலும், மூன்றாவது ரகம் ரூ.4,450 முதல் ரூ.4,950 வரையிலும் ஏலம் போனது.

இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி பகுதி வியாபாரிகள் பங்கேற்றனர்.

**தேயிலை விவசாயிகளுக்கு கோத்தகிரியில் பயிற்சி முகாம்**

கோத்தகிரி: கோத்தகிரியில் சிறு தேயிலை விவசாயிகளுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் மகளிர் குழுக்களை சேர்ந்த 300 பேர் பங்கேற்றனர். மகளிர் திட்ட அலுவலர் ரேணுகா தேவி தலைமை வகித்தார். 12வது தேயிலை வாரிய திட்ட அறிக்கையை டாக்டர் உமா மகேஸ்வரி விவரித்தார். டாக்டர் மாலதி தேயிலைக்கு ஏற்படும் நோய்கள் குறித்தும் அதற்கான தீர்வையும் விளக்கினார். உதவி தோட்ட கலை இயக்குநர் சித்ராபானு தேயிலை நாற்று மற்றும் மானியம் குறித்து விளக்கினார். சிறு தேயிலை மகளிர் விவசாய சங்க தலைவர்கள், தேயிலை வளர்ச்சி குறித்து பேசினார்கள். தரமான தேயிலை தயாரிப்பு இலை பறிப்பு குறித்து தேயிலை வாரிய உதவி இயக்குநர் ஜார்ஜ் விளக்கினார்.

**பஞ்சு விலை 3 மாதத்தில் ரூ.19 ஆயிரம் உயர்ந்தது**

கோவை : பஞ்சு விலை கடந்த 3 மாதத்தில் ஒரு கண்டி (355 கிலோ) ரூ.35 ஆயிரத்தில் இருந்து ரூ.19 ஆயிரம் அதிகரித்து, ரூ.54 ஆயிரமாக உயர்ந்தது. இந்நிலையில் நேற்று முதன்முறையாக ரூ.ஆயிரம் குறைந்துள்ளது. நூற்பாலைகளின் மூலப்பொருளான பஞ்சின் விலை கடந்த 3 மாதங்களாக தொடர்ந்து படிப்படியாக உயர்ந்து வருகிறது. கடந்த ஏப்ரல் மாதத்தில் பஞ்சின் விலை ஒரு கண்டி (356 கிலோ) ரூ.35 ஆயிரமாக இருந்தது. இது மே 31ம் தேதி ரூ.40 ஆயிரமாகவும், ஜூன் 13ல் ரூ.42 ஆயிரமாகவும், ஜூன் 28ல் ரூ.44 ஆயிரமாகவும், இம்மாதம் 4ம் தேதி ரூ.44,600 ஆகவும், 11ம் தேதி ரூ.50 ஆயிரமாகவும், கடந்த வாரம் முழுவதும் ரூ.54 ஆயிரமாகவும் நிலவியது. கடந்த 3 மாதத்தில் ரூ.35 ஆயிரத்தில் இருந்து ரூ.19 ஆயிரம் அதிகரித்து ரூ.54 ஆயிரமாக உயர்ந்தது. இந்நிலையில், கடந்த 3 மாதத்தில் நேற்று முதல்முறையாக ஒரு கண்டிக்கு ரூ.ஆயிரம் குறைந்துள்ளது.

இதுகுறித்து நூற்பாலை நிர்வாகத்தினர் கூறுகையில், 'பஞ்சு விலை உயர்விற்கேற்ப நூல் விலை கிலோ ரூ.185ல் இருந்து ரூ.15 அதிகரித்து ரூ.200 வரை மட்டுமே உயர்த்தப்பட்டது. ரூ.220க்கு விற்றால் தான் தற்போதைய பஞ்சு

விலைக்கு கட்டுப்படியாகும். ஆனால் ரூ.220க்கு உயர்த்த முடியவில்லை. ஏற்கனவே ரூ.200க்கு உயர்த்தப்பட்ட விலைக்கேற்ப துணி விலையை உயர்த்த முடியவில்லை என்று விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் நூல் கொள்முதலை குறைத்துவிட்டனர். இதனால் பெரும்பாலான நூற்பாலைகள் நஷ்டத்திற்கு நூல் விற்பதை தவிர்க்க, உற்பத்தியை 3ல் 2 பங்கு குறைத்து விட்டனர். பருத்தி விலை ரூ.35 ஆயிரத்திற்கு கீழ் குறைந்தால் தான் நூற்பாலைகளில் உற்பத்தி இயல்பு நிலைக்கு திரும்பும். தற்போதைய பஞ்சு விலை ரூ.ஆயிரம் குறைப்பு என்பது யானைப்பசிக்கு சோளப்பொரியாகும்' என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திருவாரூரில் இருந்து வேலூருக்கு பொதுவினியோக திட்டத்துக்காக 1,500 டன் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பிவைக்கப்பட்டது



திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த நெல் மாவட்டத்தில்

உள்ள அரசு அங்கீகரிக்கப்பட்ட அரவை மில்லுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அரிசி மூட்டைகளாக தயாரானது. இந்த அரிசி மூட்டைகள் சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு, பொது வினியோக திட்டத்திற்காக பல மாவட்டங்களுக்கு ரெயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி நேற்று திருவாரூர் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 1,500 டன் அரிசி மூட்டைகள் 144 லாரிகள் மூலம் திருவாரூர் ரெயில் நிலையம் கொண்டு வரப்பட்டன. பின்னர் அரிசி மூட்டைகளை லாரியில் இருந்து தொழிலாளர்கள் சரக்கு ரெயில் பெட்டிகளில் ஏற்றினர். இதை தொடர்ந்து 29 பெட்டிகளில் ஏற்றப்பட்ட 1,500 டன் அரிசி பொது வினியோக திட்டத்திற்காக திருவாரூரில் இருந்து வேலூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.